மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அது வேறு, இது வேறு.

திரு. எம். சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜப்பான் போன்ற நாடுகளில் அதற்கான மார்க்கெட் நிரம்ப இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, கோவை மாவட்டத்தில் அந்தப் பகுதியில், குறிப்பாக, வறட்சிப் பகுதியில் இருக்கிற விவசாயிகள் பயன்பெறுகிற வகையில், அதனை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை, அரசு மீண்டும் பரிசீலித்து, அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய சாத்தியக் கூறுகளைப் பரிசீலிக்குமாறு வேளாண் தொழிற் கழகத்தை அரசு கேட்டுக் கொள்ளும்.

[முற்பகல் 9.30]

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இன்றைக்கு வேறு பயிர்களை பயிர் செய்யும்போது அதிக பூச்சிக் கொல்லி மருந்துகளும், உரமும் தேவைப்படுகின்றன. ஆனால் அதன் வருமானம் குறைவாக இருக்கின்றது. இந்தக் குதிரை மசால் தீவனம் பயிர் செய்வதற்கு அதிகமான பூச்சி மருந்துகளோஅல்லது அதிக அளவு உரமோ தேவையில்லாமல் வளருகின்ற நிலை இருக்கின்றது. எனவே இதை அதிகமாகப் பயிர் செய்ய ஊக்குவித்து அதிகமான விலை பெறுகிற அளவுக்கு இதை எங்கெங்கு ஏற்றுமதி செய்ய முடியுமோ அங்கெல்லாம் ஏற்றுமதி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இவைகள் அனைத்தையும் அரசு பரிசீலிக்கும்.

தேவகோட்டையிலுள்ள விவசாயப் பண்ணை.

*வினா எண் 48.—திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவகோட்டையில் உள்ள விவசாயப் பண்ணை நஷ்டத்தில் நடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) வேலி அமைத்தல் மற்றும் நீர்ப்பாசன வசதிகளை பெருக்குவதன் மூலமும் விதை உற்பத்தியை பெருக்குவதன் மூலமும் தேவகோட்டையிலுள்ள அரசு பண்ணையை நல்ல முறையில் இழப்பின்றி நடத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ச. அங்குசாமி: தலைவர் அவர்களே, இந்த விவசாயப் பண்ணையினுடைய பரப்பளவு எவ்வளவு? இந்த விவசாயப் பண்ணையிலே என்னென்ன விவசாயப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 98.47 ஏக்கர் பரப்பளவில் இருக்கின்றது. மரவள்ளி விதைப் பெருக்குத் திட்டம், காய்கறி உற்பத்தி மையம், முந்திரி தாய் இன விதைப் பெருக்குத் திட்டம் போன்ற விஷயங்கள் நடைபெற்று வருகின்றன.

திரு. ச. அங்குசாமி: தலைவர் அவர்களே, அங்கே பயிரிடப் படுகின்ற காய்கறிகளை அங்கே பொறுப்பில் உள்ளவர் தங்களுக்கு வேண்டியவர்களுக்குக்கொடுத்து வருவதால் நஷ்டம் ஏற்படுகிறது, என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அது பற்றிய புகார் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றித் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பண்ணை நட்டத்தில் நடப்பதாகவும், வருங்காலத்தில் நட்டம் இன்றி செயல் படுத்த முடியும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே எவ்வளவு நட்டத்தில் இது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா காளிமுத்து: தலைவர் அவர்களே, அதைப் பற்றித் தகவல் இல்லை என்றாலும் அந்தப் பண்ணை நிலத்தில் இருக்கின்ற கிணறுகள் ஒன்றுக்கொன்று, தொலை தூரத்தில் இருக்கின்ற காரணத்தாலும் அவைகளிலிருந்து தண்ணீர் வயல்களில்பாயமுடியாமல் இருக்கின்ற காரணத்தினாலும் இத்தகைய இழப்பு ஏற்படுகின்றது. இவைகளை எல்லாம் சீர்படுத்தி இழப்பை ஈடு கட்டலாம், ஊதியத்தையும் பெறலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, தேவகோட்டை பண்ணை எப்போது ஆரம்பிக்கப்பட்டது? ஆரம்பத்தில் இருந்தே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா! எப்போதாவது லாபம் கிடைத்திருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டிலே இது துவக்கப்பட்டது. அதிலே முந்திரி தாய் இன விதைப் பெருக்குத் திட்டம் இன்னும் பலன் கொடுக்க ஆரம்பிக்கவில்லை. மற்றவை எல்லாம் ஆரம்ப நிலையிலேதான் இருக்கின்றன. அதனாலே இத்தகைய இழப்பு ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்திலே நிச்சயமாக இந்த இழப்பு ஈடு செய்யப்படும்.